| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இறுதிஅறிக்கை தாக்கல்** | : | 28.12.2022 | **தீர்வளிக்கப்பட்டது** | : | 11.03.2026 |
| **புலன்கொள்ளப்பட்டது** | : | 28.12.2022 | **விசாரணை காலம்** | : | 3 வருடங்கள் 2 மாதங்கள் 14 நாட்கள் |

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மேட்டுர்

**முன்னிலை:** N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L., நீதித்துறை நடுவர் எண்.1,

நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டுர்.

**2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 11 –ம் தேதி புதன்கிழமை**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 340/2022**

CNR No. TNSA1800-2791-2022

அரசுக்காக காவல் ஆய்வாளர், மேட்டுர் காவல் நிலையம்
Cr. No. 28 of 2022 u/s 279, 304(A) of I.P.C. **...புகார்தாரர்**

**–எதிர்–**

**ரகுபதி (27/2026) த/பெ.ராமசாமி, 3/261 சாமந்த்மலை,**
**கிருஷ்ணகிரி மாவட்டம். ..எதிரி**

இந்த வழக்கில் அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் **திரு. T. சுரேஷ்** அவர்களும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.G.ராமசந்திரன்** அவர்களும் மற்றும் **திரு.K. தேவராஜ்** அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இந்த நீதிமன்றம் வழங்கும்,

## வழக்கு விசாரணை விவரங்கள்

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:– R.O.C. No. 814/2020/RG/F1, நாள்: 07.04.2021–ன் படி)

| | | | |
|---|---|---|---|
| i. | குற்றஞ்சாட்டப்பட்டவர் சிறையில் இருந்த காலம் | : | இந்த வழக்கில் எதிரி கடந்த 09.03.2022ம் தேதியன்று காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு அன்றே பிணையில் விடுவிக்கப்பட்டார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ii. | புகார் / இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 28.12.2022 | | |
| iii. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது | | |
| iv. | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | 08.02.2023 | | |
| v. | கு.வி.மு.ச. பிரிவு 317-ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | : | 1)CMP-4381/2023 Date : 19.06.2023 u/s.70(2) CrPC Allowed.<br>2)CMP-2/2025 Date : 11.06.2023 u/s.70(2) CrPC Allowed.<br>3)CMP-2/2025 Date : 11.06.2023 Advance Hearing Petition Allowed. | | |
| vi. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம் | : | | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 15.07.2025 | 15.07.2025 |
| | | | அ.சா.2 | 15.07.2025 | இல்லை |
| | | | அ.சா.3 | 15.07.2025 | இல்லை |
| | | | அ.சா.4 | 22.07.2025 | இல்லை |
| | | | அ.சா.5 | 26.08.2025 | இல்லை |
| | | | அ.சா.6 | 11.09.2025 | 11.09.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அ.சா.7 | 06.11.2025 | 06.11.2025 |
| vii. | கு.வி.மு.ச. பிரிவு 313–ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி | : | 23.02.2026 | | |
| viii. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | – | | |
| ix. | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | : | இல்லை | | |

**தீர்ப்புரை**

இந்த வழக்கில் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, இந்த வழக்கில் இறந்து போன கோபால் என்பவர் கடந்த 2022 ஆம் வருடம் மார்ச் மாதம் 3–ஆம் தேதி, மாலை 6:30 மணிக்கு பால் வாங்குவதற்காக, மேட்டூரில் இருந்து பவானி செல்லும் பிரதான சாலையில் காவிரி கிராஸ் பேருந்து நிறுத்தம் அருகே, சைக்கிளை தள்ளிக்கொண்டு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சாலையின் இடதுபுற ஒரமாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, அதே சாலையில் அவருக்கு பின்னால் மேட்டூர் பக்கம் இருந்து வந்த இவ்வழக்கில் எதிரி ரகுபதி என்பவர் தனது TN 40 F 5843 என்ற பதிவு எண் கொண்ட மகேந்திரா பிக்கப் வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சைக்கிளை தள்ளிக் கொண்டு நடந்து சென்ற கோபால் மீது மோதி விபத்து ஏற்படுத்தி, அந்த விபத்தினால் ஏற்பட்ட காயங்களின் விளைவுகளால், மேற்படி கோபால் என்பவர் இறந்து போக காரணமாக இருந்து, **இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 279 மற்றும் 304–A** ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றச்செயல் செய்துள்ளதாக **மேட்டூர் காவல் நிலைய ஆய்வாளர் சுப்பிரமணியன்** என்பவர் கடந்த **2022 ஆம் வருடம் டிசம்பர் மாதம்**

**28ஆம் தேதி** தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையில் அடிப்படையில் ஏற்பட்ட குற்ற வழக்கு இதுவாகும்.

1. இந்த வழக்கில் கடந்த **28.12.2022–ம்** தேதி, எதிரிக்கு எதிரான குற்றங்கள் புலன்கொள்ளப்பட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் ஆஜரான எதிரிக்கு **பாரத குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 230–ன் படி** வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கடந்த **02.02.2023ம்** தேதி இலவசமாக வழங்கப்பட்டது.

2. அதன் பின்னர் கடந்த **08.02.2023** தேதி இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், **எதிரி இ.த.ச. பிரிவுகள் 279, 304–A ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ்** குற்றச்செயல்களை செய்துள்ளார்கள் என்று அனுமானிக்க தகுந்த முகாந்திரங்கள் உள்ளதாக கருதி, கீழ்கண்டவாறு குற்றச்சாட்டுகளின் சாராம்சம் குறித்து படித்துக் காட்டி, விளக்கி கூறி, வினவிய போது, தான் குற்றவாளி அல்ல எனவும், வழக்கை விசாரிக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

3. ஆகவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, இந்த வழக்கில் அரசு தரப்பில் **அ.சா. 1 முதல் அ.சா.7** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.**8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

4. **அரசு தரப்பு சாட்சிகள் வாயிலாக அறியப்படும் வழக்கின் விபரம்:**

    a) **நிகழ்நிலை புகார்தாரரின் சாட்சியம்:** இந்த வழக்கில் இறந்து போன கோபால் என்பவரின் மகள் அ.சா.1 மகேஸ்வரி என்பவர், கடந்த 2022 ஆம் வருடம் ஒரு நாள் மாலை 6 மணி அளவில், அவருடைய அப்பா கோபால் பால் வாங்குவதற்காக மேட்டூரில் இருந்து ஈரோடு செல்லும் சாலையில் சைக்கிளை தள்ளிக் கொண்டு, காவிரி கிராஸ் பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது, அவருக்கு பின்னால் வந்த டெம்போ மோதியதாக சம்பவ இடத்திலிருந்தவர்கள் அவருக்கு தகவல் கொடுத்துள்ளார்கள். தகவல் தெரிந்து சம்பவ இடத்துக்கு வந்து

பார்த்தபோது, அவரது அப்பாவுக்கு தலையில் பின் பகுதியில் அடிபட்டு மயக்க நிலையில் இருந்துள்ளார். அவரை ஆம்புலன்ஸ் மூலம் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு அவர் மயக்க நிலையில் இருந்ததால், அங்கு வந்த காவல் துறையினர் மேற்படி அ.சா.1 மகேஸ்வரியிடம் சம்பவம் குறித்து விசாரணை செய்து அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

b) மேலும் மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அவரது அப்பாவை அனுப்பி வைத்துள்ளார்கள். சேலம் அரசு மருத்துவமனையில் 16 நாட்கள் தொடர் சிகிச்சையிலிருந்தும் சிகிச்சை பலனின்றி மேற்படி கோபால் இறந்து விட்டார்.

c) **முதல் தகவல் அறிக்கை:** மேற்படி இந்த வழக்கில் இறந்து போன கோபால் என்பவர் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, கிடைக்கப்பெற்ற **அ.சா.ஆ.4 தகவலின்** அடிப்படையில், அங்கு சென்ற **அ.சா.6 சிறப்பு காவல் ஆய்வாளர் மகாலிங்கம்** என்பவர், இறந்து போன கோபால் மயக்க நிலையில் இருந்ததால், மேற்படி அவரது மகள் அ.சா.1 மகேஸ்வரி என்பவரிடமிருந்து பதிவு செய்யப்பட்ட புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில், **மேட்டூர் காவல் நிலைய குற்ற எண். 28/2022, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 279 மற்றும் 337** ஆகியவற்றின் கீழ் **அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்துள்ளார்.

d) மேற்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னிட்டு, மேற்கண்ட அ.சா.6 சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மகாலிங்கம் என்பவர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.4 சீரங்கன் மற்றும் அ.சா.5 மோகன்ராஜ் ஆகிய இருவர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ.6 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம்** தயார் செய்துள்ளார். ஆனால் மேற்படி பார்வை மகஜர் சாட்சிகள்

மேற்கண்டவாறு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டதாக இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக காவல்துறையினர் தங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்று மட்டும் தான் சாட்சியம் அளித்துள்ளனர்.

e) **நேரில் பார்த்த சாட்சிகள்:** இந்த வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.2 முனியம்மாள் என்பவர் சம்பவத்தின் போது, தனது வீட்டில் இருந்துள்ளார். அப்போது சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது அவருக்கு தெரிந்த கோபால் என்பவர் கீழே விழுந்து கிடந்துள்ளார். அவர் விபத்தை நேரில் பார்க்கவில்லை விபத்தை ஏற்படுத்திய எதிரியையும் சம்பவ இடத்தில் பார்க்கவில்லை.

f) மேலும் மற்றொரு நேரில் பார்த்த சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.3 சத்யா என்பவரும் விபத்தின் போது வீட்டில் இருந்துள்ளார். அவருக்கு தெரிந்தவர் போன் செய்து, மேற்படி அவருக்குத் தெரிந்த கோபால் என்பவருக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொல்லி உள்ளார்கள். தகவல் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்று பார்த்தபோது கோபால் கீழே கிடந்துள்ளார். மேற்படி சத்தியா விபத்தை நேரில் பார்க்கவில்லை. டெம்போ மோதியதாக அங்கிருந்தவர்கள் சொல்லி உள்ளனர். ஆனால் அந்த வாகனத்தின் ஓட்டுனரை அவர் பார்க்கவில்லை.

g) மேலும் இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியாக காவல்துறையினரால் குறிப்பிடப்பட்ட நந்தகுமார் என்பவருக்கு அழைப்பாணை சார்வு செய்ய, உரிய அவகாசம் அளிக்கப்படும் அழைப்பானை சார்வு செய்யப்படாததால், இந்த நீதிமன்றம் கடித எண். 2258/2025 நாள்: 31.12.2025–ல் பதிவு தபால் மூலம் அழைப்பானை அனுப்பி, அது முகவரியில் உள்ள விவரங்கள் போதவில்லை என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது.

h) மேலும் மேற்படி அரசு தரப்பில் நேரில் பார்த்த சாட்சிகளாக குறிப்பிடப்பட்ட அ.சா.2 முனியம்மாள் மற்றும் அ.சா.3 சத்யா ஆகிய இருவரும் இந்த வழக்கு சம்பவத்தில் நேரில் பார்க்கவில்லை என்ற விதமாக சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில், அவர்களை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு அவ்வாறு குறுக்கு விசாரணை செய்தும், எந்தவித தொடர்புபட்ட சங்கதிகளும் நிரூபணம் செய்யப்படவில்லை.

i) **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை:** மேற்படி மருத்துவமனையில் தொடர் சிகிச்சையில் இருந்த கோபால் என்பவர் இறந்துவிட்ட தகவலை பெற்று இந்த வழக்கின் சட்ட பிரிவு **இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 279 மற்றும் 304-A** ஆக சட்ட பிரிவு மாறுதல் செய்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மகாலிங்கம் என்பவர் மேற்கண்ட புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை அ.சா.7 காவல் ஆய்வாளர் சுப்பிரமணியன் பார்வைக்கு வைத்துள்ளார்.

j) **பிரேத விசாரணை:** வழக்குப் புலன் விசாரணை எடுத்துக் கொண்ட காவல் ஆய்வாளர் அ.சா.7 சுப்பிரமணியன் கடந்த 2022 ஆம் வருடம் மார்ச் மாதம் 17ஆம் தேதி, காலை 6 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டுள்ளார். மேலும் சம்பவ இட சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன் பின்னர் காலை 8.30 மணிக்கு சேலம் அரசு மருத்துவமனை சென்று சவக்கிடங்கின் முன்பு, இந்த வழக்கில் இறந்து போன கோபால் என்பவரின் இறப்பின் காரணம் அறியும் பொருட்டு, பஞ்சாயத்தார்கள் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு **அ.சா.ஆ.9 பிரேத விசாரணை அறிக்கை** தயார் செய்துள்ளார்.

k) **பிரேத பரிசோதனை**: மேலும் இறந்து போன கோபால் என்பவரின் இறப்பின் அறிவியல் ரீதியான காரணம் அறியும் பொருட்டு, அவரது உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளார். அவ்வாறு

பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் கார்த்திக் என்பவர் மேற்படி கோபால் தனக்கு ஏற்பட்ட தலை காயங்களின் விளைவுகளினால் இறந்திருக்க கூடும் என **அ.சா.ஆ.10 பிரேத பரிசோதனை அறிக்கை** வழங்கி உள்ளார்.

l) **மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு :** மேலும் இந்த வழக்கின் புலன் விசாரணை அலுவலரின் வேண்டுகோளுக்கிணங்க, இந்த வழக்கு சம்பந்தப்பட்ட மகேந்திரா பிக்கப் பாகத்தை ஆய்வு செய்து, **அ.சா.ஆ.11 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை** வழங்கி உள்ளார். அந்த அறிக்கையில் இந்த விபத்தானது, மேற்படி வாகனத்தில் ஏற்பட்ட ஏதேனும் இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை எனவும், மேற்படி வாகனத்தில் இடது பக்கம் மூன்றாவது காலம் அருகில் சேதம் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

m) **இறுதியறிக்கை:** மேலும் இந்த வழக்கின் இறுதிக்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட **அ.சா.7 காவல் ஆய்வாளர் சுப்பிரமணியன்** என்பவர் கடந்த **16.05.2022–ஆம்** தேதி தனது புலன் விசாரணை முடித்து, கடந்த **28.12.2024–ஆம்** தேதி இந்த வழக்கின் எதிரிக்கு எதிராக **இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 279 மற்றும் 304–A** ஆகியவற்றின் கீழ் குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தில் **தாக்கல் செய்துள்ளார்.**

5. மேற்படி அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னர், கடந்த **23.02.2026ம்** தேதி அரசு தரப்பு சாட்சியங்களில், **பாரத குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம். பிரிவு 351(1)(b)–ன் படி** எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகளை தொகுத்து, படித்துக்காட்டி விளக்கிக் கூறி கேள்வி கேட்ட பொழுது, அவற்றை பொய்சாட்சி என தெரிவித்தார். ஆகவே எதிரி தரப்பு சாட்சி விசாரணை **11.03.2026**ம் தேதி முடிக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

6. **இந்த வழக்கில் தீர்வளிக்கப்பட வேண்டிய எழுவினா யாதெனில்? அரசுத்தரப்பு, எதிரிக்கு எதிராக சுமத்தியுள்ள குற்றச்சாட்டை சந்தேகத்துக்கு இடமின்றி**

**நிரூபணம் செய்துள்ளதா? என்பதாகும்.**

**சாட்சிய பகுப்பாய்வு மற்றும் முடிவு**

7. இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு, எதிரித்தரப்பில் எந்தவித சாட்சியங்களும், ஆவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை. எனவே அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ததன் அடிப்படையில், அரசுதரப்புச் சாட்சியங்களுக்கு எதிராக எதிரித்தரப்பில் அளித்துள்ள பதில்கள் மற்றும் எதிர்வாதங்களின் அடிப்படையிலும் இந்த நீதிமன்றம் கீழ்கண்ட சங்கதிகளாக இருதரப்பிலும் முதற்கட்டமாக நிரூபணம் செய்யப்பட்ட சங்கதிகளாக தீர்மானித்துள்ளது.

8. **விபத்து மற்றும் விபத்து நடந்த விதம்:** இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு, அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு எதிரான சங்கதிகள் குறித்து, **குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 313(1)(b)–ன்** எதிரியிடம் கேள்வி கேட்கும் போது அவர் **"நான் அந்த இடத்திற்கு போகும் போது கீழே விழுந்து கிடந்தார். நான் அவர் மீது மோதவில்லை"** என்று பதிலளித்துள்ளார் என்பதை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கின்றது.

9. மேலும் இந்த விபத்து எதிரி ஓட்டி வந்த வாகனம் மோதித்தான் ஏற்பட்டது என்பதற்கு, மேற்கண்டவாறு நேரடி சாட்சியங்கள் எதுவும் அரசு தரப்பில் இல்லை என்பதையும், இந்த வழக்கில் நேரில் பார்த்த சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்ட யாரும் இந்த சம்பவத்தை அல்லது எதிரியை சம்பவ இடத்தில் வைத்து பார்த்ததாக சாட்சியம் அளிக்கவில்லை என்பதையும் இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கின்றது.

10. **இறப்பு மற்றும் காயங்களுக்கான காரணங்கள்:** மேலும் இந்த வழக்கில் இறந்து போன **கோபால்** என்பவரின் உடலில் பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் தான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கையில், மேற்படி **கோபால்,** மேற்படி விபத்தினால் ஏற்பட்ட **தனக்கு ஏற்பட்ட தலைக்காயங்களின் விளைவுகளால்** இறந்திருக்க கூடும் என **அ.சா.ஆ.10** சான்று வழங்கியுள்ளார்.

ஆனால் இந்த வழக்கில் எவ்வாறு மேற்படி கோபால் என்பவருக்கு காயங்கள் ஏற்பட்டது என்பதற்கான நேரடி சாட்சியங்கள் எதுவும் இல்லை என்பதை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கின்றது.

11. மேலும் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட எதிரி ஓட்டி வந்த மகேந்திரா பிக்கப் வாகனத்திற்கு இடது பக்கம் மூன்றாவது காலம் அருகில் சிறிய சேதம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த சேதம் இந்த வழக்கில் சைக்கிளை தள்ளிக் கொண்டு நடந்து சென்ற கோபால் என்பவர் மீது மோதித்தான் ஏற்பட்டது என்பதற்கு எந்த முகாந்திரங்களையும், இந்த நீதிமன்றத்தால் கண்டறிய இயலவில்லை. மேற்படி மிதிவண்டி குறித்து இந்த வழக்கு புலன் விசாரணை அலுவலர் அ.சா.7 சுப்பிரமணியன் என்பவரிடம் கேட்டபோது, அவர் மிதிவண்டியை கைப்பற்றியதாகவும், இந்த மிதிவண்டியை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்த முடியாது என்பதால், அதனை அதன் உரிமையாளர் வசம் திரும்ப ஒப்படைத்து விட்டதாகவும், அதனை புகைப்படம் எதுவும் எடுத்து இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

12. அதே நேரம் மேற்படி புலன் விசாரணை அலுவலரை குறுக்கு விசாரணை செய்யும்போது, சம்பவத்தின் போது இறந்து போன கோபால் என்பவர் தடுமாறி சைக்கிளுடன் கீழே விழுந்துவிட்டதாகவும், சைக்கிள் தான், மேற்படி எதிரி ஓட்டி வந்த பிக்கப் வாகனத்தின் மீது லேசாக மோதியது எனவும், எதிர்த்தரப்பில் தெரிவித்துள்ளதை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கின்றது. மேற்படி மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையை தவிர, இந்த வழக்கு சம்பவம் எதிரியின் கவனக்குறைவு அதிவேகம் மற்றும் எதிரி ஓட்டி வந்த வாகனம் மோதித்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்பதற்கு எந்தவித இரண்டாம் நிலை சாட்சிகளும் இந்த வழக்கில் இல்லை. மேலும், மேற்படி விபத்து இயந்திரக் கோளாறினால் ஏற்பட்டதாகவும் சான்று வழங்கப்படவில்லை.

13. மேலும் இந்த விபத்து எவ்வாறு நடைபெற்றது என்பது குறித்து சிசிடிவி கேமரா பதிவுகள் உள்ளிட்ட எந்தவித இரண்டாம் நிலை சாட்சியங்களும் அரசு தரப்பில் இல்லை.

14. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், இந்த வழக்கு சம்பவம் நடைபெற்ற பகுதியை சுற்றி இருந்து சம்பவத்தை இயல்பாகவும், முழுமையாகவும் பார்த்த நபர்கள் யாரும் காவல் துறை தரப்பில் சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை என்பதை அறிய முடிகிறது. அவர் விசாரணை செய்யப்பட்டதாக சொல்லப்படும் சாட்சிகளும், சம்பவத்தை நேரில் பார்த்ததாக இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. ஆகவே இந்த விபத்தானது, மேற்படி எதிரியின் அதிவேகம் கவனக்குறைவு மற்றும் பின் விளைவுகளை எதிர்நோக்காமல் அஜாக்கிரதையாக செயல்பட்டது தான், இந்த விபத்துக்கு காரணமாக அமைந்தது என்பதை நிரூபிக்கும் அளவுக்கு இந்த வழக்கில் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் இல்லை என நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவு**

ஆகவே மேற்கண்ட காரணங்கள் அடிப்படையிலும், இந்த வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.2 முனியம்மாள் மற்றும் அ.சா.3 சத்யா ஆகிய இருவரும் சம்பவத்தை தாங்கள் நேரில் பார்க்கவில்லை என்று சாட்சி அளித்துள்ளதாலும், அவர்களை தவிர இந்த சம்பவம் எவ்வாறு யாருடைய கவனக்குறைவாக நடைபெற்றது என்பதற்கான எந்தவித முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கில் இல்லாததாலும், இந்த வழக்கில் எதிரிக்கு எதிரான **இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 279 மற்றும் 304–A** ஆகியவற்றின் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு போதிய சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணம் செய்யவில்லை என தீர்மானித்து, இந்த வழக்கில் தீர்வளிக்கப்படவேண்டிய எழுவினாவிற்கு அரசு தரப்புக்கு எதிராக இந்த நீதிமன்றம் விடையளிக்கிறது.

முடிவாக, இந்த வழக்கின் எதிரி **இ.த.ச. பிரிவுகள் 279, 304(A)** ஆகியவற்றின் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து இந்த நீதிமன்றம் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் **பிரிவு 255(1)–ன் கீழ்** விடுதலை செய்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த வழக்கில் சான்று பொருள்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**மேலும் இந்த வழக்கில் எதிரிக்கு பிணையாளர்கள் வழங்கிய பிணைப் பத்திரத்தை இரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.**

இந்த தீர்ப்புரை என்னால் எனது சுருக்கெழுத்திற்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழை திருத்தம் செய்து, சரிபார்க்கப்பட்டு, இன்று **2026ம் வருடம் மார்ச் மாதம் 11–ம் தேதி** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டு, எனது கையொப்பமும், நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN
Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.03.11 18:34:36 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | மகேஸ்வரி |
| அ.சா.2 | முனியம்மாள் |
| அ.சா.3 | சத்யா |
| அ.சா.4 | சீரங்கன் |
| அ.சா.5 | மோகன்ராஜ் |
| அ.சா.6 | திரு.மகாலிங்கம், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.7 | திரு.சுப்ரமணியன், காவல் ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ. சா. ஆ.1 | புகார் வாக்குமூலம் |

| | |
|---|---|
| அ. சா. ஆ.2 | பார்வை மகசரிலுள்ள முதலாவது அ.சா.4ன் சீரங்கனின் கையெழுத்து |
| அ. சா. ஆ.3 | பார்வை மகசரிலுள்ள இரண்டாவது அ.சா.5ன் மோகன்ராஜின் கையெழுத்து |
| அ. சா. ஆ.4 | இன்டிமேசன் |
| அ. சா. ஆ.5 | முதல் தகவல் அறிக்கை |
| அ. சா. ஆ.6 | பார்வை மகசர் |
| அ. சா. ஆ.7 | மாதிரி வரைபடம் |
| அ. சா. ஆ.8 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருள் :– இல்லை**

**எதிரி தரப்பு சாட்சிகள்:–**இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்:–** இல்லை

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.03.11 18:34:23 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1 ,மேட்டூர்.**

**<u>குறிப்பு</u>**

**1) தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.**

**2) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.**

**3) இவ்வழக்கில் சாட்சிகள் மூன்று முறைக்கு மேல் இந்த நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.**

**<u>நகல்:–</u>**

**1) மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.**